www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**12 R** Register No. [ ]

# முதல் இடைப்பருவத் தேர்வு – 2024

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **10 x 1 = 10**

**சரியான விடையை தேர்வு செய்து குறியீட்டுடன் விடையை எழுதவும்.**

1. முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு இ ) சிறிய அளவிலான தனி ஆள் வணிகம் இ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ ) முதல் ஈ) இலாபம்
3. கடன் கொள்முதல் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
4. முழுமைபெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?
   அ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை ஆ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும் ஈ) வரி அதிகாரிகள் ஏற்றுக்கொள்வதில்லை
5. கடனாளிகள் தொடக்க இருப்பு : ₹30,000 பெற்ற ரொக்கம் ₹90,000, கடன் விற்பனை ₹1,00,000 ; கடனாளிகள் இறுதி இருப்பு?
   a) ₹30,000 b) ₹1,30,000 c) ₹40,000 d) ₹20,000
6. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
7. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு இ) உபரி அல்லது பற்றாக்குறை
   ஈ) நிதிநிலை
8. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?
   அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம் இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் ஈ) அறைகலன் விற்ற தொகை
9. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
   அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு
10. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
    அ) சந்தா – வருவாயின வரவு ஆ) உயில் கொடை – முதலின வரவு இ) விளையாட்டு உபகரணம் – வருவாயினச் செலவு ஈ) நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்கியது – முதலினச் செலவு

### பகுதி - II

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண்.17 கட்டாயம்)** **5 x 2 = 10**

11. முழுமை பெறாத பதிவேடுகள் என்றால் என்ன?
12. உயில்கொடை என்றால் என்ன?
13. இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின செலவுகளுக்கு எ.கா. தருக.
14. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதி முதல் | 80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| 01.4.2017 அன்று தொடக்க முதல் | ? |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் 25,000

15. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பன்பாட்டு மன்றத்தின் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 24,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 65,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 12,000 |

16. ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும்.

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது : ₹44,000

| விவரம் | ₹ | ₹ |
|---|---|---|
| சந்தா பெறவேண்டியது | 3,000 | 5,000 |
| முன் கூட்டிப்பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

17. பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிக்கவும் மற்றும் கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| ஆண்டு முடிவில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 60,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 5,000 |

## பகுதி - III

ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண்.24 கட்டாயம்) 5 x 3 = 15

18. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

19. முழுமை பெறா பதிவேடுகளின் ஏதேனும் மூன்று குறைபாடுகளை விளக்குக.

20. முழுமை பெறாத பதிவேடுகளிலிருந்து கடன் விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது?

21. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,50,000 |

22. 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹1,10,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |



www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

23. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். அந்த மன்றம் 2016–2017 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ₹40,000. இதில் 2015–2016 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹5,000 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹3,000 உள்ளடங்கியுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹1,000 இன்னும் பெறவேண்டியுள்ளது.

24. காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018 ஏப்ரல் 1 தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 50,000 |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x 5 = 15**

25. a) நிலையறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்பு இடையே உள்ள வேறுபாடுகளைத் தருக.

**(அல்லது)**

b) பெறுதல்கள் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தருக.

26. a) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| விவரம் | 1.1.2018 - ₹ | 31.12.2018 - ₹ |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 2,00,000 |
| வங்கிக் கடன் | 1,40,000 | 1,00,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹3,000 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

**(அல்லது)**

b) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | | |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள் திருப்பம் | 60,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,80,000 | 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

27. a) கடலூர் கபடி மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.4.2018) | 11,000 | வங்கி கட்டணம் | 250 |
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | 20,000 | இதர வருமானம் | 1,350 |
| எழுதுபொருள் வாங்கியது | 5,200 | மைதான பராமரிப்பு | 550 |
| பயணச் செலவு | 1,800 | அரசிடம் பெற்ற மானியம் | 12,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | தொலைபேசிக் கட்டணம் | 2,800 |
| பொதுச் செலவு | 500 | அறக்கட்டளை நிதி பெற்றது | 10,000 |
| சேர்க்கைக் கட்டணம் | 4,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| அஞ்சல் செலவு | 2,000 | மின் கட்டணம் செலுத்தியது | 5,000 |
| நகராட்சி வரி செலுத்தியது | 3,000 | ரொக்க இருப்பு (31.03.2019) | 1,750 |

(அல்லது)

b) கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ – | | மைதான வாடகை செலுத்தியது | 12,000 |
| கை ரொக்கம் | 23,000 | அச்சுக் கட்டணம் | 5,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 | வங்கிக் கட்டணம் | 1,000 |
| அரங்க வாடகை பெற்றது | 6,000 | கட்டடம் மீதான காப்பீடு | 2,000 |
| சந்தா பெற்றது | 9,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 7,000 | தணிக்கைக் கட்டணம் | 3,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 4,000 |
| இயந்திரம் விற்றது | 11,000 | முதலீடு செய்தது | 11,000 |
| (ஏட்டு மதிப்பு ₹9,000) | | இருப்பு கீ/இ | |
| | | கைரொக்கம் | 2,000 |
| | | வங்கி ரொக்கம் | 14,000 |
| | 70,000 | | 70,000 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com